# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1976/22 - 2016 ජූලි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.07.21

*1976/22 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு தொடர்பான (திருத்த) நியதிச் சட்டம்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் 2016, யூன் மாதம் 09 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2016, யூன் 16 ஆந் திகதி ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரது கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,<br>
செயலாளர்,<br>
ஊவா மாகாணத்தின் மாகாண சபை.

*ஊவா மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,<br>
இராஜ வீதி,<br>
பதுளை,<br>
2016, யூலை 14.*

*ஊவா மாகாண மாகாண சபை*

*2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா மாகாண சபையின் ஊவா மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் நியதிச் சட்டம் (திருத்தங்கள்).*

*2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, ஊவா மாகாண கூட்டுறவுச் சேவையாளர் ஆணைக்குழு சபையின் நியதிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நியதிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 13 ஆவது நியதிச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஊவா மாகாண சபை மூலமாக இத்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.*

*1. இந்நியதிச் சட்டம் ஊவா மாகாண சபையில் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழு சபை (திருத்தங்கள்) நியதிச் சட்டத்தின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்படுவது ஊவா மாகாண ஆளுநரின் மூலம் அனுமதி கிடைக்கப்பெற்ற திகதி அல்லது தீர்மானம் எடுக்கப்பட்ட திகதியிலிருந்து அனைத்து விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.*

சுருக்க தலைப்பு மற்றும் நடை முறைப்படுத்தும் திகதி.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*பிரதான நியதிச் சட்டத்தின் 5 ஆவது பிரிவு களின் திருத்தங் கள்.*

(இதன் பிறகு நடைமுறையிலுள்ள நியதிச் சட்டம்) 2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழு சபை நியதிச் சட்டத்தின் 5 ஆவது பிரிவில் (1) மற்றும் (3) உப பிரிவுகளை அகற்றி அதற்கு பதிலாக கீழ் காணப்படும் புதிய உப பிரிவுகளை உள்ளடக்கப்படுவதற்கு இதன் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

*ஆணைக்குழுவின் உள்ளடக்கம்.*

(1) இவ்வாணைக்குழுவானது அமைச்சராக பெயர் குறிப்பிடப்படுகின்ற ஊவா மாகாண கூட்டுறவு சேவைகள் அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற 5 உறுப்பினர்களைக் கொண்டதாக காணப்படவேண்டும்.

(3) கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மூவர் அரச சேவையில் பணிப்புரிந்து ஓய்வுபெற்ற உயர் பதவிகளை வகித்தவர்கள் இருக்க வேண்டிய அதேவேளை அவர்களில் ஒருவர் கூட்டுறவு சேவைகள் தொடர்பாக சிறந்த அறிவினை கொண்டவராக காணப்பட வேண்டும்.

2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, ஊவா மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழு சபை நியதிச் சட்டத்தின் 7 ஆவது பிரிவில் (2), (3) மற்றும் (4) உப பிரிவுகளை அகற்றி அதற்கு பதிலாக கீழ் காணப்படும் புதிய உபபிரிவுகளை உள்ளடக்கப்படுவதற்கு இதன் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டங்களின் 3 உறுப்பினர்கள் சமூகமளித்தல் பெரும்பான்மையாக காணப்படும்.

(3) உறுப்பினர்கள் சமுகமளிக்கும் சந்தர்ப்பங்களில் ஏதாவதொரு விடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்க முடியாத சந்தர்ப்பத்தில் அந்த விடயம் தொடர்பாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் பங்கு பற்றும் கூட்டத்திற்கு அறிவிக்க வேண்டும.

(4) ஆணைக்குழுவின் 5 உறுப்பினர்களும் சமூகமளித்த கூட்டத்தில் ஒரு விடயம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய தீர்மானம் தொடர்பாக உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பின் பெரும்பான்மையினரின் விருப்பிற்கு ஏற்ப தீர்மானம் எடுக்கப்படும். இருப்பினும் உறுப்பினர்கள் சமமாக காணப்படும் சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு தலைவருக்கு விருப்பு வாக்குரிமை வழங்கப்படும்.

*மொழி ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழி உரையே அதிகாரமாகும்.*

இந்நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரை பதங்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழியிலமைந்த உரையே அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.